JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

DV.No.15/2020 Date: 23.03.2023 R.W.1

பெயர் : சந்திரசேகர்
தந்தை /கணவர் பெயர் : பக்தவச்சலம்

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 23rd day of March 2023

சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கபட்ட சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -

1. நான் தற்போது நம்பர் 55எச், பாரதிதாசன் காலனி, கே கே நகர், சென்னையில் குடியிருந்து வருகிறேன். எனக்கும் மனுதாரருக்கும் 24.04.2002ம் திருமணம் நடைபெற்றது. எங்களுடைய திருமணமானது காதல் திருமணம் ஆகும். நாங்கள் திருமணம் ஆன பின்னர் நம்பர் 41, பெருமாள் கோவில் தெரு, சைதாப்பேட்டையில் குடியிருந்து வந்தோம். அதற்கு பின்பாக நியூ காலனி சைதாப்பேட்டையில் குடியிருந்து வந்தோம். அங்கு சுமார் 4 வருடங்கள் குடியிருந்தோம். அதற்கு பின்பாக பாரதிதாசன் காலணியில் குடியிருந்து வந்தோம்.

2. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் முகவரி சைதாப்பேட்டை முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி முகவரியானது மனுதாரரின் முகவரியாகும். எத்தனை ஆண்டுகளாக நானும் மனுதாரரும் பிரிந்து வாழ்கிறோம் என்றால் கடந்த 3 ஆண்டுகளாக பிரிந்து வாழ்கிறோம். என்னுடைய அம்மா வீடு எங்குள்ளது என்றால் அயப்பாக்கம் அம்பத்தூரில் உள்ளது. மேற்படி வீடானது சொந்த வீடாகும். அதை தவிர வேறு ஏதேனும் சொத்து உள்ளதா என்றால் இல்லை. என்னுடன் பிறந்தவர் என் அண்ணன் ஆவார்.

3. எங்களுக்குள் சொத்து பிரிக்கப்பட்டதா என்றால் இல்லை. அம்மா வீட்டிலிருந்து என்னுடைய பங்கு கிடைக்கவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய பங்காக ரூ.15,00,000 லட்சம் பணம் கொடுக்கப்பட்டதாக கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. ரூ.15,00,000 பணம் பெற்றதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரூ.15,00,000 கொடுத்து சொத்து மனுதாரரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தான செட்டில்மெண்ட்டாக என்றாலும் விக்கிரையம் ஆகாது என்றால் செட்டில்மெண்ட்டாக பத்திரம் பதிவு செய்தால் தான் பத்திர பதிவு செலவு குறைவாகும் என்று கூறினார்கள்.

4. மனுதாரரின் உடன் பிறந்த மற்றவர்களுக்கும் மனுதாரரின் தந்தை செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக சொத்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ரூ.15 லட்சம் பணம் என் அம்மா கொடுத்ததற்கு நான் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பணம் ரொக்கமாக

கொடுக்கப்பட்டது. எப்பொழுது என் அம்மா பணம் கொடுத்தார் என்றால் 2006ம் வருடம் பணம் கொடுத்தார். பணத்தை நான் வங்கியில் டெப்பாசிட் செய்தேன் என்றால் செய்யவில்லை. கையில் தான் வைத்திருந்தேன். என் அம்மா ரூ.15 லட்சம் பணம் ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் நான் என் மாமனாரிடம் பணம் ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் மனுதாரரின் தந்தை மனுதாரர் மீது இருக்கும் அன்பின் காரணமாக மனுதாரருக்கு 2007ல் சொத்தை செட்டில்மெண்ட் பத்திரமாக எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல, நான் மனுதாரரின் தந்தைக்கு பணம் கொடுத்தேன்.

5. நான் டிரைவிங் பள்ளியில் வேலை செய்து வருகிறேன். நான் டிரைவிங் பயிற்சியாளராக வேலை செய்து வருகிறேன். மேற்படி டிரைவிங் பள்ளி யாருடைய பெயரில் உள்ளது என்றால் பி. செல்வகுமார் என்பவரது பெயரில் உள்ளது.

(நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

மறு விசாரணை - இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur